தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் இன்று முதல் விஞ்ஞான வேளாண்மை திட்டம் அமல்

தமிழகத்தில் இன்று முதல் விஞ்ஞான வேளாண்மை திட்டம் அமலுக்கு வருகிறது. தமிழகத்தில் உள்ள விளைநிலங்களில் விளைச்சலை 2 மடங்காக அதிகரிப்பதுடன், விவசாயிகளின் வருமானத்தையும் 3 மடங்காக உயர்த்துவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். அந்தவகையில் இன்று முதல் தமிழகத்தில் உள்ள பஞ்சாயத்துகளில் வசிக்கும் விவசாயிகளை அவர்கள் வசிக்கும் பகுதிக்கு நேரடியாக விவசாயத்துறை அதிகாரிகள் சென்று சந்தித்து அவர்களுடைய குறையை தீர்க்கும் வகையில் இந்த ‘விஞ்ஞான வேளாண்மை திட்டம்’ அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

### கால்நடைகளுக்கு இலவச தடுப்பூசி முகாம்

ராஜபாளையம் வெட்ஜோன் விலங்குகள் நலமையம் சார்பில் கால்நடைகளுக்கு இலவச வெறிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. மாவட்ட வன உயிரின காப்பாளர் அசோக்குமார் தலைமை வகித்தார். க. கோபால்சாமி எம்.எல்.ஏ. முகாமை துவக்கி வைத்தார். தமிழ்நாடு கால்நடை பல்கலைக் கழக ராஜபாளையம் பயிற்சி மையத் தலைவர் கதிர்வேல், மருத்துவர்கள் செந்தில், அர்த்தநாரீஸ்வரன், மேகலா, சசிகுமார் அடங்கிய கால்நடை மருத்துவர் குழுவினர் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். ஏற்பாடுகளை மருத்துவர் ராமச்சந்திரன், எஸ்.டி. செல்வராம் ராஜா, வார் அமைப்பு நிர்வாகி சுப்பிரமணியராஜா ஆகியோர் செய்திருந்தனர்.

### விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தர பயணத் திட்டம் தொடக்கம்

தருமபுரி மாவட்டம், செம்மாண்டகுப்பத்தில் விவசாயிகள் குழு சார்ந்த நிரந்தரப் பயணத் திட்டம் திங்கள்கிழமை தொடங்கியது. வேளாண் துறை சார்பில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தை தொடக்கிவைத்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது: இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தில் உதவி வேளாண்

அலுவலர்கள் நிரந்தரப் பயணம் மேற்கொண்டு திட்டச் செயலாக்கங்களைச் செயல்படுத்துவர். இதன் மூலம், மாவட்டத்தில் 2 லட்சத்து 100 ஹெக்டேரில் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு, 4.72 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர். இதில், வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) வேணுகோபால், உதவி இயக்குநர் ச.ரவிக்குமார், தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி, தோட்டக்கலை உதவி இயக்குநர் எஸ்.முகுந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கத் திட்டம் தொடக்கம்

அரூரில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கத் திட்ட தொடக்கவிழா திங்கள்கிழமை நடைபெற்றது. வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) ஏ.இளவரசி தலைமை வகித்தார். ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கத் திட்டத்தை அரூர் எம்.எல்.ஏ. பி.டில்லிபாபு குத்துவிளக்கேற்றி தொடக்கிவைத்தார். வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் துறை, அட்மா உள்ளிட்ட வேளாண் துறை சார்ந்த அரசு திட்டங்கள், அரசு வழங்கும் மானியத் திட்டங்கள், விவசாயம் சார்ந்த பணியில் புது தொழில்நுட்பங்கள், விவசாயத்தில் அதிக மகசூல் பெறுதல், விளை பொருள்களை சந்தைப்படுத்துதல் குறித்து எம்.எல்.ஏ. பி.டில்லிபாபு பேசினார். விழாவில், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன், வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் பி.ராமர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 28 டன் சின்ன வெங்காயம் ரூ. 4.50 லட்சத்திற்கு ஏலம்

பெரம்பலூர் மாவட்டம், செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திறந்த முறை ஏலத்தில் 28 டன் சின்ன வெங்காயம் ரூ. 4.50 லட்சத்துக்கு விற்பனையானது. செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் அம்மாபாளையம், தேனூர், நத்தக்காடு, மங்கூன், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத்தனூர்,

சிறுவயலூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, சிறுவாச்சூர், மாவலிங்கை, அடைக்கம்பட்டி, பாடாலூர், கோனேரிபாளையம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 110 விவசாயிகள் சின்ன வெங்காயத்தை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதில், தருமபுரி, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, செட்டிக்குளம், சத்திரமனை, பொம்மனப்பாடி, பாடாலூர், இரூர், சிறுவயலூர், அம்மாபாளையம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 15 வியாபாரிகள், 443 மூட்டை (28,584 கிலோ) வெங்காயத்தை அதிகபட்சமாக கிலோ ரூ. 27-க்கும், விதை வெங்காயத்தை கிலோ ரூ. 32-க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ. 16-க்கும் ஏலத்தில் எடுத்தனர். இதன்மூலம் 28 டன் சின்ன வெங்காயம் ரூ. 4,46,964-க்கு விற்பனையானது.

## ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கத் திட்ட துவக்க விழா

கூடலூரை அடுத்துள்ள புத்தூர்வயல் கிராமத்தில் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கத் திட்ட துவக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது. தோட்டக்கலை, மலைப் பயிர்கள் துறை சார்பில், புத்தூர்வயல் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. துவக்க நிகழ்ச்சிக்கு, உதவி தோட்டக் கலை இயக்குநர் (பொ) ஜெயலட்சுமி தலைமை வகித்து, திட்டத்தை துவக்கி வைத்தார். விவசாயிகளுக்கு அரசின் திட்டத்தை அவர்களது கிராமத்திலேயே பெறும் வழிமுறைகள் குறித்தும், பல்வேறு அரசின் நலத்திட்டங்களை பெறுவது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில், வேளாண்மை பொறியியல் துறையின் உதவி செயற் பொறியாளர் சந்திரசேகரன், உதவி மண்வள பாதுகாப்பு அலுவலர்கள் சுந்தரலிங்கம், சுந்தர்ராஜ், வேளாண் விற்பனைத் துறை அலுவலர் லட்சுமணன், பள்ளியின் தலைமையாசிரியர் கண்ணன், உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## நெல்லை மாவட்டத்தில் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில், விவசாயிகள் பயன்பெறும் வகையில், கூடுதலாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் மு. கருணாகரன் குறிப்பிட்டார். விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை திட்டத்தில், குழு சார்ந்த நிரந்தர பயணத் திட்டம் அறிமுகம்

செய்யப்பட்டுள்ளது. கிராம ஊராட்சியில் 20 விவசாயிகள் கொண்ட ஆர்வலர் குழு தொடங்கப்படும். குழுத் தலைவர், செயலர் உள்ளிட்ட நிர்வாகிகளை வேளாண் உதவி அலுவலர் சென்று சந்தித்து வேளாண்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், பயிர் சாகுபடி முறைகள், சாகுபடியில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆலோசனை தெரிவிப்பார். இத்திட்டத்தை பாளையங்கோட்டை வட்டாரம் முன்னீர்பள்ளத்தில் திங்கள்கிழமை ஆட்சியர் மு. கருணாகரன் குத்துவிளக்கு ஏற்றித் தொடங்கிவைத்து வேளாண் தொழில்நுட்ப வழிக்காட்டி கையேட்டை வெளியிட்டு பேசினார். அவர் பேசியதாவது: நிகழ் பருவத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில், பிசான சாகுபடி முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன்பெறும் வகையில் கூடுதலாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். மேலும் சந்தையில் தனியாரை விட கூடுதலான விலை கொள்முதல் நிலையங்களில் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர். இந்நிகழ்ச்சிக்கு, திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் தலைமை வகித்தார். தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் எஸ். ராஜாமுகம்மது, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் வீ. கருத்தப்பாண்டி, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவி ஹேமாபாலா, முன்னீர்பள்ளம் ஊராட்சித் தலைவர் மகராஜன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் ஆறுமுகம், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் எஸ். தமிழ்வேந்தன், உதவி இயக்குநர் அசோகன் மற்றும் விவசாயிகள், வேளாண்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். இம்மாவட்டத்தில் 114 ஊராட்சிகளில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இனி விவசாயிகள் தங்கள் விவசாயப் பணிகளை முடக்கி விட்டு வேளாண்துறை அதிகாரிகளை தேடிச் செல்ல வேண்டாம். உதவி வேளாண் அலுவலர்கள் அந்தந்தக் கிராமங்களுக்குச் சென்று விவசாயிகள் ஆர்வலர் குழு நிர்வாகிகளை 2 வாரத்துக்கு ஒரு முறை சந்தித்து ஆலோசனை வழங்குவார்கள் என வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். சிவந்திபுரம்: அம்பாசமுத்திரம் வட்டாரம், சிவந்திபுரத்தில் இத்திட்டத்தை மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பார்வதி தொடங்கிவைத்தார். ஊராட்சித் தலைவர் பி. ரேச்சல், வேளாண் உதவி இயக்குநர் சை. சுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத் தலைவர் டி.

செல்வன், வேளாண் துணை அலுவலர் தவசி, தோட்டக்கலைத் துறை அலுவலர் சிவகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பால் உற்பத்தியாளருக்கு உபரி பணம்**

திருக்கழுக்குன்றம்: பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, சோகண்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு, உபரி பணம், நேற்று வழங்கப்பட்டது. திருக்கழுக்குன்றம் ஒன்றியத்திற்குட்பட்ட, சோகண்டி கிராமத்தில் இயங்கி வரும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 225 உறுப்பினர்கள் உள்ளனர். இங்கு தினசரி, 300 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த இரண்டு நிதியாண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட பாலிற்கு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தொகை போக, சங்க கணக்கில் உபரி பணம், 86,650 ரூபாய் இருப்பு இருந்தது. அந்த தொகை, சங்க உறுப்பினர்கள் வழங்கிய பாலின் அளவிற்கேற்ப, சங்க விதிகளின்படி நேற்று பிரித்து வழங்கப்பட்டது.

**விலையில்லா கறவை மாடுகள் 50 பயனாளிகளுக்கு வழங்கல்**

கும்பகோணம்: பருத்திச்சேரியில், தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகளை, 50 பயனாளிகளுக்கு, அமைச்சர் வைத்திலிங்கம் வழங்கினார். கும்பகோணம் அருகே உள்ள திருவிடைமருதூர் ஒன்றியம், பருத்திச்சேரி ஊராட்சியில், தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, கலெக்டர் சுப்பையன் தலைமை வகித்தார். பருத்திச்சேரி ஊராட்சி தலைவர் கோமளவல்லி வரவேற்றார். மயிலாடுதுறை எம்.பி., பாரதிமோகன், தஞ்சை எம்.எல்.ஏ., ரெங்கசாமி, ஒன்றியக்குழு தலைவர் அசோக்குமார், மாவட்ட கவுன்சிலர் சூரியமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், தமிழக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

அமைச்சர் வைத்திலிங்கம், 15 லட்சம் மதிப்பில், விலையில்லா கறவை மாடுகளை, 50 பயனாளிகளுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில், முன்னாள் எம்.எல்.ஏ., ராமநாதன், ஒன்றியக்குழு துணைத்தலைவர்கள் பாலமுருகன், சின்னையன், தொடக்க கூட்டுறவு வங்கி தலைவர்கள் செம்மங்குடி முத்துகிருஷ்ணன், ஏனநல்லூர் ராஜீ, மனோகரன், திருநாகேஸ்வரம் செல்வராஜ், திருநறையூர் பாண்டியராஜன், நிலவளவங்கி இயக்குனர் ஆத்திக்குளம் பால்ராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள் பட்டம்மாள், சேகர், பாண்டியன், புதூர்சேகர், சார்லஸ், மாலதி மற்றும் ஊராட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர். ஊராட்சி செயலர் வரதராஜன் நன்றி கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்</u>**

ஆற்காடு, : ஆற்காடு அருகே வேளாண்மைத்துறை சார்பில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நேற்று நடந்தது. ஆற்காடு அடுத்த கரிவேடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் நடந்த பயிற்சி முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் சு.பேபிபர்வதம் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் பார்த்திபன் முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் டேவிட் ராஜ்குமார் வரவேற்றார். ராணிப்பேட்டை விதைச்சான்று அலுவலர் சத்தியலட்சுமி கலந்து கொண்டு விதைச்சான்று நடைமுறைகள் குறித்தும், தரமான விதைகளை உற்பத்தி செய்யும் முறைகளை குறித்தும் விளக்கி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். மேலும் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், பண்ணைக் குட்டை அமைத்தலின் அவசியம், எள் மற்றும் சூரியகாந்தி சாகுபடி குறித்தும், மணிலா சாகுபடி தொழில்நுட்பம் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கி பயிற்சி அளிக்கப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

## நெல் அறுவடை பணிகள் துவக்கம்

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் கரும்பு, மஞ்சள் மற்றும் நெல் 15 ஆயிரம் ஹெக்டேரில் விளைவிக்கப்பட்டு வந்தது. தற்போது தண்ணீர் பற்றாக்குறை காரணமாக பாதியாக குறைந்து விட்டது. இந்நிலையில் தர்மபுரி மாவட்டத்தில் நடப்பாண்டில் பருவமழை போதிய அளவு பெய்ததால் விளைச்சல் அதிகரித்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் பெரும்பாலானோர் வெள்ளை பொன்னி ரகத்தினை பயிரிட்டுள்ளனர். தர்மபுரி ஏ.கொல்லஅள்ளி அருகே வேடியப்பன் திட்டில் பயிரிட்டு நன்கு விளைந்துள்ள நெற்கதிர்களை நேற்று விவசாயிகள் அறுவடை செய்தனர். இதுபற்றி விவசாயி பாலாஜி கூறும் போது, எங்களுக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் நடப்பா ண்டில் ஆடி மாதம் வெள்ளை பொன்னி ரக நெல் பயிரிட்டோம். கடந்தாண்டும் இதே போல் வெள்ளை பொ ன்னி தான் பயிரிட்டோம். இந்தாண்டு பருவமழை ஆவணி மாதத்தில் நன்றாக பெய்தது. இதனால் கிணற்றில் தண்ணீர் மட்டம் உயர்ந்ததையெட்டி நடப்பாண்டில் விளைச்சல் அதிகரித்துள்ளது. கடந்தா ண்டு 2 ஏக்கரில் 6 மூட்டை நெல் கிடைத்தது. நடப்பா ண்டில் 15 மூட்டை வரை கிடைக்கும் என்றார். நடப்பாண்டில் நெல் விளைச்சல் அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## பருத்தியில் பரவலாக காணப்படும் இலைப்புள்ளி, கருகல் நோய்

பெரம்பலூர், : பருத்தி பயிரில் ஆல்டர்னேரியா இலைப்புள்ளி நோய், பாக்டீரியா இலைக்கருகல் நோய் பரவலாகக் காணப்படுகிறது. வயல்களை நேரில் ஆய்வு செய்த கலெக்டர் தரேஸ்அகமது பருத்தியைக் காப்பாற்ற யோசனை தெரிவித்துள்ளார். பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி விவசாயத்தில் விவசாயிகளுக்கு ஆர்வம் ஏற் படுத்த ஹெக்டேருக்கு ரூ.1.25 லட்சம் பெருக்கும் திட்டத்திற்காக இந்த ஆண்டு ஆயிரம் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களது வயல்களில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த பருத்தி வயல்களை கலெக்டர் தரேஸ்அகமது, நேர்முக உதவியாளர் (வேளாண்) கனகசபையுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வு

அடிப்படையில் கலெக்டர் தெரிவித்திருப்பதாவது: ஒரு ஹெக்டேரில் ரூ.1.25 லட்சம் பெருக்கும் திட்டம் வயல்களிலும், இதர பருத்தி வயல்களிலும் ஆய்வு செய்ததில் செட்டிக்குளம், கண்ணப்பாடி கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி பயிரில் ஆல்டர்னேரியா இலைப்புள்ளி நோய், பாக்டீரியா இலைக்கருகல் நோய் பரவலாகக் காணப்படுகிறது. அதிக அளவு ஈரப்பதமுள்ள வயல்களில் உள்ள பருத்திச் செடிகளால் மண்ணிலுள்ள எந்த சத்தையும் வேரின் மூலம் எடுத்துக்கொள்ள இயலாது. அதனால் இலைவழியாக நீரில் கரையும் உரங்களான 19:19:19 ( கிலிலி 19) அல்லது 20:20:20 ( கிலிலி 20) அல்லது 13:0:45 ( னீபறீtவீ ரி )போன்றவற்றை 1 லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். அத்துடன் இலைவழி நுண்ணூட்டச் சத்துக்கலவை அல்லது மக்னீசியம் சல்பேட் லிட்டருக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் இந்தச் செடிகளில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான வெள்ளை ஈ, தத்துப்பூச்சி, இலைமூலம் பரவும் நோய்களான தயிர்புள்ளி மற்றும் ஆல்டர்னேரியா இலைப்புள்ளி நோயின் தாக்குதலும் அதிகமாக உள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த பூச்சி மற்றும் பூசணக் கொல்லி களில் ஏதேனும் ஒன்றை நீரில் கலந்துதெளிக்க வேண்டும். அசிட்டாமிபிரைடு 20 ஷிறி ஏக்கருக்கு 40கிராம், இதனுடன் புரோபிகோனசோல் 25 ணிசி ஏக்கருக்கு 200மில்லி அல்லது ஹெக்சகோனசோல் ஏக்கருக்கு 200மில்லி அல்லது கார்பன்டசிம் 50 கீறி ஏக்கருக்கு 200 கிராம் தெளிக்கவேண்டும். மாவுப்பூச்சி அதிகமுள்ள பகுதியில் புரப்பினோபாஸ் 50 ணிசி என்ற பூச்சிக்கொல்லியை ஏக்கருக்கு 400 மில்லி என்ற அளிவில் மேற்கண்ட பூசணக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை கலந்து தெளிக்க வேண்டும். இதுபோன்ற நீரில் கரையும் உரங்கள், பூச்சி மற்றும் பூசணக் கொல்லிகளை தெளிப்பதற்கு முன்பாக வயலில் உள்ள பஞ்சினை முழுவதுமாக எடுத்துவிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## <u>கடலையில் அதிக மகசூல்பெற வேளாண் அதிகாரி விளக்கம்</u>

சேதுபாவாசத்திரம், : மார்கழி பட்டம் கடலை சாகுபடியில் அதிக மகசூல்பெற அடியுரம் இடுவது அவசியம் என சேதுபாவாசத்திரம் வட்டார வேளா ண்மை உதவி இயக்குநர் பெரியசாமி கூறியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள

செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: மார்கழி பட்ட கடலை சாகுபடியில் குறைந்த செல வில் அதிக எடை கொண்ட காய்கள் பெறுவதற்கு ஊட்டமேற்றிய தொழுஉரம் தயார் செய்து கடைசி உழவின்போது பயன்படுத்த வேண்டும். ஊட்டமேற்றிய தொழுஉரம் தயார் செய்திட ஒரு ஏக்கருக்கு 300 கிலோ மக்கிய தொழு உரத்துடன் 80 கிலோ சூப்பர் பாஸ் பேட் மற்றும் 35 கிலோ பொட் டாஷ் உரத்தையும் கலந்து குவியலாக செய்து ஒரு மாதத்திற்கு வைத்திருக்க வேண்டும். பின்னர் 15 கிலோ யூரியாவுடன் கலந்து தூவிவிட வேண்டும். விதை நேர்த்தி செய்த விதைகளை வரிசைக்கு வரிசை 30 செ.மீ இடை வெளி விட்டு செடிக்கு செடி 10 செ.மீ இடைவெளியில் 4 செ.மீ ஆழத்தில் ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் விதைக்க வேண்டும். இவ்வாறு விதைக்கும் போது, ஒரு சதுர மீட்டருக்குள் 33 செடிகள் இருக்க வேண்டும். அதிக மகசூல் பெற பயிர் எண்ணிக்கை முக்கியமானதாகும். தெளிப்பு நீர்பாசன கருவி கொண்டு நீர் பாய்ச்சினால் தண்ணீர் சிக்கனமாகவும் அதிக பரப்பளவில் சாகுபடி செய்து நல்ல மகசூல் பெறலாம். மேலும், கால்சியம் மற்றும் சல்பர் பற்றாக்குறை உள்ள நிலங்களில் ஏக்கருக்கு 80 கிலோ வீதம் விதைப்பு செய்த 40 முதல் 45 நாட்களில் ஜிப்சம் இட்டு மண் அணைப்பு செய்தால் அனைத்து விழுதுகளும் எண்ணெய் சத்துக்களுடன் திரட்சியான காய்களாக மாறும். விதைப்பு செய்த 25ம் நாள் ஒரு முறையும் 35ம் நாள் ஒரு முறையும் ஊட்டச் சத்துக் கரைசல் தெளித்தல் அவசியமாகும். ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ டிஏபி உரம், 400 கிராம் அம்மோனியம் சல்பேட் மற்றும் 200 கிராம் போராக்ஸ் ஆகிய மூன்றையும் தெளிப்பதற்கு முதல்நாள் இரவே 15 லிட்டர் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். மறுநாள் அதை வடிகட்டி கிடைக்கும் தெளிந்த கரைசலை (13 லிட்டர்) 187 லிட்டர் தண்ணீரில் கலந்து அதனு டன் 140 மில்லி ப்ளானோபிக்ஸ் என்ற வளர்ச்சி ஊக் கியை சேர்த்து தெளித்தால் திரட்சியான பொக்கற்ற காய்கள் அதிகம் பிடித்து நல்ல மகசூல் பெறலாம். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## இரண்டாம் போக நடவு தீவிரம்: பசுமையாக மாறிய கம்பம் பள்ளத்தாக்கு

சின்னமனூர், : இரண்டாம் போக நெல் நடவு பணியால் ஒன்றரை மாத இடைவெளியில் கம்பம் பள்ளத்தாக்கு மீண்டும் பசுமையாக மாறியது.

கம்பம் பள்ளத்தாக்கில் 14 ஆயிரத்து 714 ஏக்கரில் வருடத்தில் இருபோகம் நெல் சாகுபடி விவசாயம் நடந்து வருகிறது. இப்பாசனத்திற்கு முல்லைப் பெரியாற்றின் பாசனம் பிரதானமாக உள்ளது. வழக்கமாக ஜூன் முதல் தேதி பொதுப்பணித்துறையினரின் கட்டுப்பாட்டிலுள்ள முல்லைப்பெரியாற்று அணையில் தண்ணீர் திறக்கப்படும். உடனே விவசாயிகள் நாற்றாங்கால் பாவி 25 நாட்களில் நாற்றை வளர்த்து முதல் போகத்திற்கு நடவு துவக்குவர். பிறகு 120 நாட்களில் அறுவடையை வெற்றிகரமாக நிறைவு செய்வர். முதல்போகம் அறுவடை முடிந்ததும் இரண்டாம் போக நெல் நடவை துவக்குவர். தற்போது முதல்போகம் முடிந்து இரண்டாம் போக நெல் நடவுப்பணி தீவிரமடைந்துள்ளது. இன்னும் ஒரு வாரத்தில் நடவுப்பணி நிறைவு பெறும் தருவாயில் உள்ளது. கம்பம் பள்ளத்தாக்கு வயல்வெளிகள் யாவும் பி.சி.பட்டியில் துவங்கி வீரபாண்டி, உப்பார்பட்டி, கோட்டூர், சீலையம்பட்டி, சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம், கூடலூர், லோயர்கேம்ப் வரை தேசிய நெடுஞ்சாலையிலும், மற்றும் போடேந்திரபுரம், உப்புக்கோட்டை, டெம்புச்சேரி, பாலர்பட்டி, கூழையனூர், துரைச்சாமிபுரம், குச்சனூர், மார்க்கயன்கோட்டை, எல்லப்பட்டி, முத்துலாபுரம் விலக்கு, ராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி, ராயப்பன்பட்டி, சுருளிப்பட்டி, கே.ஜி. பட்டி, வெட்டுக்காடு ஆகியவை மாநில நெடுஞ்சாலையின் நீண்ட வரிசையில் உள்ளது. இரண்டாம் போக நெல்சாகுபடி விவசாயத்தால் ஒன்றரை மாதம் இடைவெளிக்கு பிறகு மீண்டும் பசுமையாக மாறி நிற்கிறது. தற்போது ஐய்யப்பன் கோயில் சீஷன் துவங்கி வேகமாக சென்றுகொண்டிருக்கும் நிலையில் ஐய்யப்ப பக்தர்களும், வெளிமாநில வெளிநாடு சுற்றுலாபயணிகளும் பச்சை போர்வையாய் போர்த்தப்பட்டிருக்கும் வயல்வெளிகளை பார்த்து ரசித்து போட்டோ மற்றும் வீடியோ எடுத்து செல்கின்றனர்.

## வில்லுக்குறியில் விவசாயிகள் சங்க கூட்டம்

திங்கள்சந்தை, : குமரி மாவட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்க செயற்குழு கூட்டம் வில்லுக்குறியில் நடந்தது. சங்க உதவித்தலைவர் மாடசாமிபிள்ளை தலைமை வகித்தார். துணைத்தலைவர் பாண்டுபிள்ளை வரவேற்றார். செயலாளர் தங்கமரியான் அறிக்கை வாசித்தார். நிர்வாகிகள் தெரசம்மாள், ராமையா, அலெக்ஸ் பாக்கியம், சேம்ராஜ், தவசி, மகாலெட்சுமி, அமல்ராஜ்,

ஜெயபால் உள்பட பலர் பங்கேற்றனர். கூட்டத்தில், வில்லுக்குறி பகுதியில் உள்ள இனியூர்குளம் ஆக்ரமிப்பினை அகற்றிட மாவட்ட நிர்வாகத்தை கேட்டும், தூவலாற்றின் குறுக்கே அமைந்துள்ள சிறிய பாலத்தை அகற்றி அகலமான பாலம் அமைத்திட கேட்டும், பொதுப்பணித்துறை சானல் புறம்போக்கினை சீராக அகற்றிட கேட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பொருளாளர் பெருமாள்பிள்ளை நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எண்ணெய்வித்து பயிர்களை அதிக அளவில் சாகுபடி செய்ய வேண்டும்**
**விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி வேண்டுகோள்**

புதுக்கோட்டை, எண்ணெய்வித்து பயிர்களை அதிக அளவில் சாகுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகளுக்கு வேளாண்மை அதிகாரி வேண்டுகோள் விடுத்தார்.

தொழில்நுட்ப பயிற்சி

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் தேசிய எண்ணெய் வித்து மற்றும் எண்ணெய்ப் பனை இயக்கத்தின் கீழ் விவசாயிகளுக்கு எண்ணெய்வித்து தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி நேற்று நடந்தது. இந்த பயிற்சியினை வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:–

அதிக அளவில் சாகுபடி

விவசாயிகள் நிலக்கடலையில் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெறவேண்டும். அரசு செயல்படுத்தும் வேளாண் திட்டங்களை தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்புகொண்டு பயன்பெற வேண்டும். தற்போது தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஐம்பது சத மானிய விலையில் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் ஜிப்சம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எண்ணெய்வித்து பயிர்களை அதிக அளவில் விவசாயிகள் சாகுபடி செய்திட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

செயல்விளக்கம்

உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி பேசுகையில், விவசாயிகள் மண் பரிசோதனை செய்து அதன்படி உரமிட வேண்டும். பயிற்சியில் தெரிந்துகொண்ட தொழில்நுட்பங்களைத் தங்கள் பகுதியின் பிற விவசாயிகளுக்கும் தெரிவிக்க வேண்டும். விவசாயிகள் குழுக்களாகச் செயல்படும்போது விளைபொருட்களை நல்ல விலைக்குச் சந்தைப்படுத்தலாம் என்றார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ராஜசேகரன், நிலக்கடலை பயிர்ச் சாகுபடி தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். குறிப்பாக விதைநேர்த்தி, விதைப்பு முறைகள், உர நிர்வாகம், களை நிர்வாகம், பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்து விளக்கி கூறியதுடன், பயிர் எண்ணிக்கை பராமரிப்பு குறித்து செயல்விளக்கமும் செய்து காண்பித்தார். விதை ஆய்வாளர் பாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் ரவிச்சந்திரன், வேளாண்மை அலுவலர் பூபதிக்கண்ணன் ஆகியோரும் பேசினார்கள்.

பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு எண்ணெய்வித்து தொழில்நுட்ப கையேடுகளை வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் வழங்கினார். பயிற்சியில் புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, அன்னவாசல் வட்டார விவசாயிகள் உள்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.